# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ   அதி விசேஷமானது

අංක 2376/26 – 2024 මාර්තු මස 21 වැනි බ්‍රහස්පතින්දා – 2024.03.21

*2376/26 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 13/1978* (iv)

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

*24 ஆம் உறுப்புரையின் (4) ஆம் பந்தியின் கீழான பணிப்பு*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 24 ஆம் உறுப்புரையின் 4 ஆம் பந்தியினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஆகிய நான், அமைச்சரவையின் ஒருப்பாட்டுடன் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நீதிமன்றங்களில் உள்ள பதிவேடுகளிலும் நடவடிக்கைகளிலும் அவை தொடர்பாகவும் எல்லா நோக்கங்களுக்குமாக ஆங்கில மொழியைப் பயன்படுத்துவதை இப்பணியின் மூலம் அனுமதிக்கின்றேன்.

**விஜயதாச ராஜபக்ஷ,**
நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும்
அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
*2024, மாச்சு 19.*

**அட்டவணை**

1. 1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல் நீதிமன்றம் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி நியாயாதிக்கத்தை பிரயோகிக்கின்ற அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரைகளின் கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றம்.

2. 1983 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, கடலாண்மை நியாயாதிக்க சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி நியாயாதிக்கத்தை பிரயோகிக்கின்ற இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றம்.

3. 1995 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நடுத்தீர்ப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி நியாயாதிக்கத்தை பிரயோகிக்கின்ற இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றம்.

EOG 03 - 0166


G41628 – 14 (2024/03)   இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*